## செல்வாக்குள்ளவர்களால் மட்டுமே நீதியைப் பெற முடிகிறது!

# நாட்டில் ஏழைகளுக்கு நீதி கிடைப்பதில்லை!

**“நீதி எப்போதும் கேட்கப்படுகிறது – ஆனால் அரிதாக எப்போதாவது வழங்கப்படுகிறது” என்ற தலைப்பில்**

## கொல்கத்தாவில் நடைபெற்ற விவாத மேடையில் மூத்த பத்திரிகையாளர் ராஜ்தீப் சர்தேசாய் உரை!

**கொல்கத்தா, பிப்.7 –**

**“செல்வாக்குள்ளவர்களால் மட்டுமே நீதியைப் பெற முடிகிறது நாட்டில் ஏழைகளுக்கு நீதி கிடைப்பதில்லை” என்று “கொல்கத்தாவில் நீதி எப்போதும் கேட்கப்படுகிறது. ஆனால் அரிதாக எப்போதாவது வழங்கப்படுகிறது” என்ற தலைப்பில் Calcutta Debating Circle சார்பில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று மூத்த பத்திரிகையாளர் ராஜ்தீப் சர்தேசாய் உரையாற்றினார்.**

**ஜனவரி 11 அன்று கொல்கத்தா கிளப்பில் “2025 – நீதி எப்போதும் கேட்கப்படுகிறது; ஆனால் அரிதாக எப்போதாவது வழங்கப்படுகிறது” என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று மூத்த பத்திரிகையாளர் ராஜ்தீப் சர்தேசாய் அவர்கள் உரையாற்றினார்.**

அவரது உரையின் விவரம் வருமாறு:

இந்த நாட்டின் கிரிமினல் ஜஸ்டிஸ் சிஸ்டம் சிதைக்கப்பட்டு (Broken Criminal Justice System) இருக்கிறது என்பதைஎன்னைமுன்மொழிவர்கள் அறிவார்கள். அதேபோல பொய்யான சிரிப்பு மூலம், தங்களுடைய அதீத சங்கோஜத்தை மறைத்துக் கொண்டிருக்கும் கற்றறிந்த எதிர்தரப்பினர், பார்ப்பதற்கு பாதுகாப்பாக இருப்பது போல தோன்றும் உண்மையில் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிற கொல்கத்தா விவாத சங்கம் மற்றும் கொல்கத்தா கிளப்பின் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் மனதளவில் அதனை அறிந்திருக்கிறார்கள்.

கடந்த 40 நிமிடங்களாக நாம் கேட்டுக் கொண்டிருந்த பொய் மூட்டைகளை உடைத்து உண்மையை ஒப்புக்கொள்வோம். எதிர்தரப்பு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்த வார்த்தை விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ‘அடிக்கடி’ மற்றும் ‘அரிதாக’ எனும் இந்த இரண்டு வார்த்தைகளை வைத்துக்கொண்டு வினோதமான முறையில் நியாயப்படுத்த முடியாததை நியாயப்படுத்த என வாதாடுகிறார்கள். இவர்களில் ஆர்கே சென் குப்தா நான் படித்த பல்கலைக்கழகத்தில் படித்தவராம். ஆனால் ஒரே பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள் தானே என்று ஒரே மாதிரி மதிப்பீடு செய்துவிடாதீர்கள். எனது முன்னாள் சகா பர்கா தத் ‘மெழுகுவத்தி ஏந்திய பேரணி நடத்தப்படாததால் நீதி கேட்கப்படவில்லை’ என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள். நீங்கள் குழப்புகிறீர்கள்.

### இந்திய குடிமகனுக்கு அவமரியாதை!

சட்டத்தின் இருண்ட பக்கத்தில் இருக்கும் போது, தனக்கான நீதியை ஆர்பாட்டங்கள், அறம்சார் பேரணிகள் மற்றும்இணையவழிப்பிரச்சாரங்கள் மூலம் கேட்கும் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும், மகளுக்கும் கடுமையான அவமரியாதையை செய்து இருக்கிறீர்கள். ஒரு மேடைமைவாத முன்மொழிவை எங்கள் முன் வைக்கிறீர்கள். உண்மையின் தீவிரத்தன்மையை திசை திருப்புவதற்கும் குழப்புவதற்கும் நீங்கள் எங்கள் மீது இந்த வார்த்தை ஜாலத்தை வீசி எறிந்து இருக்கிறீர்கள்.

எளிய உண்மை என்னவென்றால், இந்த நாட்டில் அதிகாரம் இல்லாதவர்களுக்கும், ஏழைகளுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைப்பதில்லை. முக்கியமான விடயம் என்னவென்றால் செல்வாக்கும் அதிகாரிகளின் அனுகூலமும் உள்ளவர்களால் மட்டுமே இந்த நாட்டில் நீதியை பெற முடியும் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.



### இரண்டு நகரங்களின் கதை!

புகழ்பெற்ற நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்கள் நிறைந்த கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதால், வார்த்தைகளைக் கவனமாகவே பேசுகிறேன். இன்று இது இரண்டு நகரங்களின் கதையை அல்ல; இரண்டு பத்திரிகையாளர்களின் கதையை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த நாடு எவ்வாறு இயங்குகிறது என்பதை புரிந்து கொள்ள உங்களுக்கு கட்டாயம் இந்த நிகழ்வுகள் சொல்லப்பட வேண்டும்.

### கோசுவாமி நீதி கேட்டார்!

நவம்பர் 2020 உச்சநீதிமன்றத்தின் விடுமுறை கால அமர்வில் ஒரு சனிக்கிழமை அன்று முன்னாள் தலைமை நீதிபதி D.Y.சந்திரசூட் தலைமை தாங்கினார். ஏனென்றால், என்னுடைய மற்றொரு முன்னாள் சக பத்திரிகையாளர் அர்னாப் கோஸ்வாமி பிறரை தற்கொலைக்கு தூண்டிய வழக்கில் மகாராஷ்டிரா அரசால் தவறாகக் கைது செய்யப்பட்டார். அவர் ஆறு நாட்கள் சிறையில் இருந்தபின், அரசியல் அமைப்புச் சட்டம் தரும் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக சனிக்கிழமை நீதிமன்ற அமர்வு கூடியது. சந்திரசூட் விடுதலையைப் பற்றி பேசிக்கொண்டிருந்த சரியான தருணத்தில் கோசுவாமி ஒவ்வொரு இந்தியரையும் போலவே நீதியை கேட்டார். அவருக்கு ஜாமீன் வழங்கியதன் மூலம் அரசியலமைப்பு சுதந்திரம் பாதுகாக்கப்பட்டதாக நீதிமன்றம் கருதியது. அதை மனப்பூர்வமாக வரவேற்றேன்.

இதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு 2020 அக்டோபரில் கைது செய்யப்பட்ட மற்றொரு பத்திரிக்கையாளர் சித்திக் கப்பனின் வழக்கிற்கு வருவோம். 19 வயது தலித் பெண் கூட்டு வன்புணர்வு செய்து கொல்லப்பட்ட வழக்கை பற்றிய தகவல்களை சமர்ப்பிக்க சென்று கொண்டிருந்த போது அவர் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டபோது மலையாள செய்தி இணையதளத்தில் பணிபுரிந்தார். கேரள பத்திரிகையாளர் யூனியன் செயலாளரான அவர் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம், பண மோசடிதடுப்புச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டார். சட்டவிரோத நடவடிக்கை தடுப்புச் சட்டத்தின்கீழ் செப்டம்பர் 2022இல் ஜாமின் வழங்கப்பட்டது. உண்மையாக கைது செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பிப்ரவரி 2023இல் தான் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

### நம் நீதிமன்றங்களின் உண்மை முகம்!

இந்த உயரிய அவையை பார்த்து கேட்கிறேன்…

கோசுவாமிக்கும், சித்தக் கப்பனுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? இரண்டு பேரின் குடும்பங்களும் நீதி கோரி நீதிமன்றத்தின் கதவை தட்டினார்கள். மிகவும் எளிமையான உண்மை என்னவென்றால் திரு.கோசுவாமி ஒரு முதன்மை நேர தொகுப்பாளர் அங்கீகரிக்கப்பட்ட பிரபல முகம். சித்திக் ஒரு அறியப்படாத பெயர் தெரியாத பத்திரிகையாளர். முகம் தெரியாத பத்திரிகையாளர். அவரது பெயரும் மதமும் சுமையாகிப் போனவர். நண்பர்களே! இதுதான் தனியுரிமை மற்றும் சுதந்திரத்தைப் பற்றி உயர்வாகப் பேசும் நீதியரசர்கள் உள்ளிட்ட நம் நீதிமன்றங்களின் உண்மை முகம்!

### காஷ்மீரிகளுக்கு நீதி வழங்கப்பட்டுள்ளதா?

இன்று உங்களை பார்த்து கேட்கிறேன் தோழர்களே! பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட காஷ்மீரிகளுக்கு நீதி வழங்கப்பட்டுள்ளதா? கடுமையான தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்து எந்த நபரையும் எவ்வித விசாரணையும் குற்றச்சாட்டுகளும் இல்லாமல் இரண்டு வருட காலம் சிறையில் வைத்திருக்கிறார்கள். அவர்களின் குடும்பத்தார் நீதி கேட்கவில்லை என்றா எண்ணுகிறீர்கள்? இல்லை அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்பதே உண்மை!

> *உண்மையில் உங்கள் மனசாட்சி பொய் சொல்கிறது. நான் உங்கள் மனசாட்சியிடம் கேட்கிறேன் வங்காள மாநிலத்தின் மக்களே! இந்தியர்களே! நமது குற்றவியல் நீதி அமைப்பு சிதைந்து போயிருக்கிறது (Broken Criminal Justice System) என்ற உண்மையை உங்கள் மனசாட்சி கண்டிப்பாய் சொல்லவேண்டும். இந்த நாட்டில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க 324 வருடங்கள் ஆகும் என்று நிதி ஆயோக்கின் அறிக்கை சொல்கிறது. 324 வருடங்கள் நான் இருக்க மாட்டேன். நம்மில் யாருமே இருக்க மாட்டோம். ஆனால் இந்த தேசம் வாழ வேண்டும்.*

### கத்தோலிக்க பாதிரியாருக்கு வழங்கப்பட்ட நீதி என்ன?

மீண்டும் நான் உங்களை பார்த்து கேட்கிறேன் தோழர்களே! பழங்குடியின மக்களின் உரிமைகளை கேட்ட ஒரே காரணத்திற்காக சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வயது முதிர்ந்த கத்தோலிக்கப் பாதிரியார் ஸ்டான் சாமி அவர்களுக்கு வழங்கப்பட்ட நீதிதான் என்ன? 82 வயதில் நடுக்கத்தில் சாப்பிட பயன்படுத்த ஒரு உறிஞ்சு குழல் (Straw sipper) கேட்டார் அனுமதி மறுக்கப்பட்டது. காவலிலேயே இறந்து போகச் செய்தார்கள். அவரை, திகார் சிறையில் தேவையான அனைத்து சிறப்பு வசதிகள் மற்றும் வைபை வழங்கப்பட்ட சுப்ரத்தோ ராய் சகாராவோடு ஒப்புமைப்படுத்தி பாருங்கள்.

### நீதி அரிதாகத்தான் கிடைக்கிறது!

நாம் மிகவும் சமத்துவமற்ற சமூகம் மற்றும் நமது நீதி சமத்துவமின்மையை பிரதிபலிக்கிறது. என்னை பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய நீதிபதிகளுக்கு தெரியும் நம் நாட்டின் சட்ட உதவி மற்றும் பாதுகாப்பின் நிலை குறித்து,எத்தனை வழக்குரைஞர்கள் நீதி மறுக்கப்பட்டவர்களுக்காக வாதாடத் தயாராக உள்ளனர் என்று, இன்றைய தலைப்பின் உண்மைத் தன்மையை நாம் உணர வேண்டும் தோழர்களே. இன்று நாம் ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை கேட்க வேண்டும். அதற்கு மெழுகுவத்தி பேரணி எல்லாம் தேவையில்லை. நீதியை கேட்பதற்கு இதயமும் முன்னோர்களால் அனைவருக்காகவும் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நம்பிக்கையும் வேண்டும். அப்படியிருக்கு மானால், எல்லாவற்றையும் கடந்து நீதிக்கான சம வாய்ப்பு வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால், ஒரு நுழைவுத் தடை இருக்கிறது. எனவே, நீதி அரிதாகத்தான் கிடைக்கிறது என்று நீங்கள் சொல்லும்போது, அந்த நுழைவுத் தடையின் மீதுதான் கவனம் செலுத்த வேண்டும்.

மார்ட்டின் லூதர்கிங் அவர்களின் இந்த வரிகளை முன்மொழிகிறேன்.

**“எங்கோ மறுக்கப்படும் நீதி எல்லா இடங்களிலும் நீதிக்கு அச்சுறுத்தல் ஆகும்.”**




இன்று நான் உங்களுக்கு ஒரு வழக்கை பற்றி சொல்கிறேன். இந்த விவாதத்திற்கு முழுமை தரக்கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த விவாதத்திற்குரிய வழக்கு கவிஞரும் டெல்லி பல்கலைக்கழக பேராசிரியருமான ஜி.என்.சாய்பாபா அவர்களுடைய வழக்காகும். நக்சல் ஆதரவாளர் என்று புனையப்பட்டு அவர் எட்டரை ஆண்டுகள் சிறையில் – அதுவும், பெரும்பாலும் தனிமை சிறையில் அடைக்கப்பட்ட மிகவும் அனுதாபத்திற்குரியவர்.

### உச்சநீதிமன்றம் அவசரமாக சிறையில் அடைத்தது ஏன்?

அக்டோபர் 2022இல் பம்பாய் உயர்நீதிமன்றம் இவரை விடுதலை செய்தது. வழக்கத்திற்கு மாறான முறையில் உச்சநீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு சனிக்கிழமை அன்று திரும்ப அழைத்து உயர் நீதிமன்ற உத்தரவை விடுவித்து தடைவிதித்து மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார் ஜி.என்.சாய்பாபா. 90 விழுக்காடு மாற்றுத்திறனாளியான அவரால் சமூகத்துக்கு என்ன தீங்கு ஏற்படப் போகிறது என்று, நீதிமன்றமும் திங்கட்கிழமை வரை பொறுக்க முடியாமல் அத்தனை அவசரமாய் அவரை சிறையில் அடைத்தது?

### நீதி கேட்டார்கள் கிடைக்கவில்லை!

கடந்த ஆண்டு அவர் இறந்தார். சிறைக் காலம் அவரது உடல்நலனில் பெரும் பாதிப்புகளை உண்டாக்கியது. அவரது குடும்பத்தினர் நீதிமன்றத்தை நாடவில்லை; மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் செல்லவில்லை என்பதால் நீதி கேட்கவில்லை என்று இந்த சபையில் யாராவது சொல்ல முடியுமா? உண்மை என்னவென்றால் அவர்கள் நீதி கேட்டார்கள்… ஆனால் அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை.

இன்னும் குற்றம்கூட சாட்டப்படாத ஒரு வழக்கில், கடந்த நான்கு ஆண்டுகளாக சிறையில் உள்ள உமர் காலித்தின் குடும்பம் நீதியைக் கோரவில்லை என்று யாராவது சொல்கிறீர்களா?

உண்மை என்னவென்றால் இது போன்ற கூட்டங்களில் சுதந்திரம் விடுதலை போன்ற மேன்மையானவற்றை உச்சரிக்கும் நீதிபதிகள் வாழ்க்கை மற்றும் சுதந்திரம் பற்றி பேசுபவர்கள் ஏழைகள் மற்றும் ஒதுக்கப்பட்டோர் என்று வரும்போது தங்கள் அறிவில் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளை மட்டுமே கொண்டுள்ளனர். உண்மை முகத்தில் அறைகிறது. இங்கு உள்ளவர்களுக்கு இது நன்றாகவே தெரியும். நீங்கள் தன்னியல்பாக தெருக்களில் இறங்கி ஆர்.ஜி.கார் விவகாரத்தில் போராடியது பெருமை அளிக்கிறது. நீங்கள் நீதி கேட்டு போராடினீர்கள் பெரிய அளவில் நீதி கிடைத்துள்ளது. நாட்டின் தலைமை நீதிபதி இந்த வழக்கு விசாரணையை நேரலையில் ஒளிபரப்பு செய்தது சிறப்பு.

### எத்தனை நீதிபதிகள் வழக்குகளை நேரலையில் முடித்து வைப்பார்கள்?

ஆனால் உங்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்படுகையில் எத்தனை நீதிபதிகள் வழக்கை நேரலையில் முடித்து வைப்பார்கள். உயர்தட்டை சாராத, பிரபலம் இல்லாத ஒருவருக்கு இந்த நீதி கிடைக்குமா?

நண்பர்களே, இதுதான் இந்தியாவின் உண்மை கதை! நாம் முழுமையாக சமத்துவமற்ற சமூகத்தில் வாழ்கிறோம். நமது 10% மக்கள் தொகையினர் 70% வருவாயை ஈட்டுகிறார்கள். அந்த 10 சதவீதம் பேருக்கு சட்டத்தின் அனுகூலம் கிடைக்கிறது. ஏழைகளுக்கும், சாதகமான சூழ்நிலையில் இல்லாதவர்களும் நீதி கிடைப்பதில்லை.

உண்மையில் உங்கள் மனசாட்சி பொய் சொல்கிறது. நான் உங்கள் மனசாட்சியிடம் கேட்கிறேன் வங்காள மாநிலத்தின் மக்களே! இந்தியர்களே! நமது குற்றவியல் நீதி அமைப்பு சிதைந்து போயிருக்கிறது (Broken Criminal Justice System) என்ற உண்மையை உங்கள் மனசாட்சி கண்டிப்பாய் சொல்லவேண்டும்.

இந்த நாட்டில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க 324 வருடங்கள் ஆகும் என்று நிதி ஆயோக்கின் அறிக்கை சொல்கிறது. 324 வருடங்கள் நான் இருக்க மாட்டேன். நம்மில் யாருமே இருக்க மாட்டோம். ஆனால் இந்த தேசம் வாழ வேண்டும்.

இவ்வாறு ராஜ்தீப் சர்தேசாய் அவர்கள் உரையாற்றினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 ஆவது நினைவு நாளையொட்டி தர்மபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் தர்மபுரி நகரச் செயலாளர் நாட்டான் மாது முன்னிலையில் ராஜகோபால் கவுண்டர் பூங்கா அருகில் இருந்து கந்தசாமி வாத்தியார் தெரு வழியாக அமைதி பேரணி சென்று நான்கு ரோட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் நகர மன்றத் தலைவர் லட்சுமி மாது, மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியக் கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளையொட்டி புதநத்தம் ஊராட்சியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தாமோதிரன் ஏற்பாட்டில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர். பழனிசாமி, கிளைச் செயலாளர் மணி, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தர்மசீலன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.